Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 8.00

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: எட்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி 21 சனிக்கிழமை (06.08.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 230

அருந்துங்கள்
அண்ணா கோப்பி
அண்ணா கோப்பியை
உடனுக்குடன் வறுத்து அரைத்து
பெற்றுக்கொள்ள
அண்ணா கோப்பிக்கடை
4, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

## போராளிகளின் பாதுகாப்பு குறித்து

# அரசின் புதிய நடைமுறைகள் புலிகளுக்கு அனுப்பி வைப்பு

## தலைமைப் பீடம் ஆராய்ந்ததாக தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**போராளிகளின் பாதுகாப்பான போக்குவரத்துக் குறித்து புதிய நடைமுறைகள் அரசினால்கடந்த 3ஆந் திகதி விடுதலைப்புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.**

அதில் அம்பாறை மாவட்ட பயண ஒழுங்கு தொடர்பாக குறிப்பிடப்படாததால் அது குறித்து அரசிடம் கோரப்பட்டுள்ளது. அத்துடன் அரசினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள புதிய நடைமுறைகள் குறித்து புலிகளின் தலைமைப்பீடத்தினால் ஆராயப்பட்டு வருவதாக அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

(7 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினருக்கு விளக்க மறியல்

இணுவில் சிகை அலங்கரிப்பு நிலையத்தின் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இரண்டு இராணுவத்தினர் சுன்னாகம் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட அவர்கள் இருவரும் நேற்று மாலை மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவனின் வீட்டில் ஆஜர்படுத்தினர். இணுவில் இராணுவ முகாமைச் சேர்ந்த வன்னிநாயக்க, தயானந்த ஆகிய இருவருமே கைதுசெய்யப்பட்டவர்களாவர். இவர்கள் இருவரையும் எதிர்வரும்18ஆம் திகதிவரை விளக்கமறியலில்வைக்குமாறுநீதிவான் உத்தரவிட்டார்.(ச)

## தமிழ்ச்செல்வனுடன் ஹெல்கீசன் சந்திப்பு

விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இச்சந்திப்பு புலிகளின் சமாதான செயலகத்தில் இடம்பெற்றது.

புலிகள்தரப்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், சமாதான செயலகப்பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோரும் நோர்வே தரப்பில் நோர்வே வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன், இலங்கைக்கான நோர்வேதூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் மற்றும் தூதரக அதிகாரிகள் கலந்து கொண்டனர். (ச)

## இணுவில் சம்பவங்களுக்கு ஜனாதிபதி கடும் கண்டனம்

(கொழும்பு)

இணுவில் பகுதியில் நேற்று முன்தினம் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரும், இளைஞர் ஒருவரும் படுகொலைசெய்யப்பட்ட சம்பவத்திற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கண்டனம் தெரிவித்துள்ளார்.

முடிதிருத்தும் நிலையத்திற்கு சென்றிருந்த இராணுவ வீரர்களில் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டும், மற்றுமொரு பொதுமகன் காயமடைந்திருந்தார். இதனையடுத்து அப்பகுதியில் நிலவிய பதற்றநிலையைக் கட்டுப்படுத்தச் சென்ற பொலிஸ் அத்தியட்சகர், ஆத்திரமடைந்த மக்களினால் கடத்தப்பட்டு கொலைசெய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இச்சம்பவங்களுக்கு கண்டனம் தெரிவித்துள்ள ஜனாதிபதி, உயிரிழந்த இளைஞனின் குடும்பத்திற்கு நஷ்டஈடு வழங்கப்படுமெனவும், பொலிஸ் அத்தியட்சகருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதிசெயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## யாழில் நெருக்கடி நிலையை தடுக்க புலிகள்- இராணுவம் நேற்று சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளருக்கும் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி சுனில் தென்னக்கோனுக்குமிடையில் யாழ்.போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்தில் முக்கிய சந்திப்பொன்று இடம் பெற்றது.

யாழ்ப்பாணத்தில் எழுந்துள்ள நெருக்கடி நிலையை தணிப்பதற்காக இத்திடீர்சந்திப்பு மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. நேற்றைய சந்திப்பின் போது யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியினால் முக்கிய விடயங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

நெருக்கடிக்கு மத்தியிலும் யுத்தநிறுத்த உடன்படிக்கையை நாம் பேணிவருகின்றோம். தொடர்ச்சியாக அடிப்படை அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வின்றியும் போரினால் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கும் இயற்கை அனர்த்த பாதிப்புக்களுக்கும் தீர்வில்லாததால் விரக்தி அடைந்திருக்கும் தமிழ் மக்கள் இன்றைய சூழலில் இவ்வாறான இராணுவப்பாதிப்புக்களால் உயிர்கள் இழக்கப்படுகின்ற போது இயல்பாகவே

(8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பிராந்தியத்தில் பிறப்பிக்கப்பட்ட

# ஊரடங்குச் சட்டத்தினால் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

இணுவிலில் இடம்பெற்ற சம்பவங்களை அடுத்து பாதுகாப்புப் படையினரால் நேற்றுப்பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டத்தினால் மக்களின் இயல்புவாழ்க்கை பாதிக்கப்பட்டது.

தமது அன்றாட வேலைகளுக்குச் சென்றவர்கள் பாதி வழியிலேயே திரும்பவேண்டிய நிலை ஏற்பட்டது. ஊரடங்குச் சட்டம் குறித்து முறையாக அறிவிக்கப்படாமையினால் மக்கள் பெரிதும் கஷ்டப்பட்டனர்.

விவசாயிகள் மற்றும் கடற்தொழிலாளர்கள் வியாபாரத்தில் ஈடுபடமுடியாமையினால் பெரும் நஷ்டத்திற்கு உள்ளாகினர்.

யாழ். நகரப் பகுதி முற்றாகச் செயலிழந்தது, மக்கள் வீதிக்கு வருவதற்கு அஞ்சினர். எனினும் ஊரடங்குச் சட்டம் அமுல்செய்யப்பட்டமை குறித்து அறியாதவர்கள் தமது அன்றாட கடமைகளில் ஈடுபட்டனர்.

பின்னர் அதுகுறித்து அறிந்ததும் பதறியடித்தவாறு ஓடினர். ஊரடங்குச் சட்டம் காரணமாக வலிகாமம் முழுவதும் முற்றாகச் செயலிழந்தது. வடமராட்சி, தென்மராட்சி மற்றும் தீவகப் பகுதிகளிலும் கடைகள் பூட்டப்பட்டிருந்தமையைக் காணக்கூடியதாக இருந்தது. வடமராட்சியில் சிலகடைகளை பொலிஸார் பலவந்தமாக மூடியதாக தெரிவிக்கப்பட்டது. ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த நேரத்தில் பொலிஸார் சந்திகள் தோறும் கொட்டன்களுடன் கடமையில் ஈடுபட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேற்று முன்தினமிரவு 8.30 மணிக்கு பிறப்பிக்கப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் நேற்று மதியம் 12.30 உடன் இடைநிறுத்தப்பட்டது. மீண்டும் நேற்றிரவு 10 மணிமுதல் இன்று அதிகாலை 5 மணிவரை ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. ச

## பொலிஸ்மா அதிபர் இன்று யாழ்.வருகை

(கொழும்பு)

யாழ்ப்பாணம் இணுவில் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு பொலிஸ் திணைக்கள உயர் அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று நேற்று யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்ணான்டோ தெரிவித்தார்.

இவ் அதிகாரிகளைக் கொண்ட குழு இணுவில் சம்பவம் தொடர்பாக சுயாதீன விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது என பொலிஸ் மாஅதிபர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்ணான்டோ இன்று யாழ்ப்பாணம் வருகை தந்து நிலைமைகளை ஆராயவுள்ளார். கொலை செய்யப்பட்ட பொலிஸ் அத்தியட்சகரின் இறுதிக்கிரியைகள் நாளை அவரது சொந்த இடமான

(8ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-2349
011-2372952-3, 011-2360290, 011 - 2360291
e.mail:-jaffna@expoavi.com,reservations@expoavi.com.

எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை..

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 'கற்பகத்தின் பொற்பதம்' வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வாரிவளவு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தின் 'கற்பகத்தின் பொற்பதம்' என்னும் ஒலி, ஒளி இசைத்தட்டு/ஒலிப்பேழை வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆயல மண்டபத்தில் யாழ்.பல்கலைககழக மருத்துவபீடப் பேராசிாியர் வை.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையினை ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ வி.இராமமூர்த்திக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் சிவஸ்ரீ ப.முத்துக்குமாரசாமி குருக்கள் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து வாழ்த்துரையினை யாழ்.பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறை விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ சி.கிருஸ்ணானந்தசர்மா மற்றும் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோரும், பாராட்டுரையை யாழ்பல்கலைக கழக ஆங்கிலத்துறை விரிவுரையாளர் கலாநிதி க.சிவகுருநாதனும், அறிமுகவுரையை காரைநகர் கம்பன்கழக அமைப்பாளர் தமிழருவி த.சிவகுமாரனும், வெளியீட்டுரையைக் கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் நல்லையா விஜயசுந்தரமும் ஆற்றவுள்ளனர்.

இசைததட்டு / ஒலிப்பேழையைப் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் வெளியிட,முதல் பிரதியினை டாக்டர் செல்வி.ந.கனகரத்தினம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தைச் சேர்ந்த க.பத்மானந்தனும் பெறவுள்ளனர். தொடர்ந்து நயப்புரைகளை யாழ்.பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி மா.வேதநாதன் மற்றும் இந்து கலாசார அமைச்சின் உதவிபபணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (ந-9)

# பிந்திய திகதியிடப்பட்ட வர்த்தமானி எதுவும் அச்சிடப்படவில்லை

## அரச அச்சகத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

பிந்திய திகதியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலொன்று அச்சிடுதல் உலகில் எந்தவொரு ஜனநாயக நாட்டிலும் நடந்திராத, இனி மேலும் நடக்காத செயறபாடடென்றும், அரச அச்சகம் அவ்வாறு பிந்தி திகதியிட்ட வர்த்தமானி அறிவித்லொன்றை எந்தவகையிலும் அச்சிடப் போவதில்லை என்றும் அரச அச்சகத் தலைவர் லக்ஸ்மன் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிடுவதென்பது ஒருவர் மட்டும் மேற்கொள்ளும செயற்பாடல்ல அதற்கென ஒரு நிர்வாகக் கட்டமைப்பு உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரச அச்சகத்திற்கு கிடைக்கும ஆவணம் வர்த்தமானி அறிவிப்பு பிரிவிற்கு அனுப்பபபட்டு அவர்கள் அங்கு தேவையான தகவல்களைச் சேர்த்த பின்னர் அதனை திருத்துநரிடம் அனுப்பவேண்டும். அந்த ஆவணத்தில் திருததங்களை மேற்கொள்வதற்காக குறைந்தபட்சம் 3 அதிகாரிகளாவது பணியாற்ற வேண்டும் எனவும் குணவர்த் தன தெரிவித்துள்ளார்.

அரச அச்சகத்திலிருந்து அனுபபப்படும் அனைத்து வர்த்தமானி அறிவித்தல்களும் ஐந்து வருடகாலம அரச அச்சகத்தின் நூலகத்தில் வைக்கப்பட்டிருக்கும். அதன் ஒரு பிரதி கட்டாயமாக அரச பதிவாளர் திணக்களத்திற்கு அனுப்பப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அண்மையில் ஆரம்பிக்கப்ட்ட அரச அச்சகத்தின் இணையத்தளத்திலும் இந்த வர்த்தமானி அிறவித்தல்கள் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் 2000ஆம் ஆண்டு ஜனாதிபதி பதவிப் பிரமாணம் செய்து கொண்டமை தொடர்பாக வர்த்தமானி அறிவித்லொன்றை வெளியிடுமாறு இதுக்கு அனுப்பபப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க 2000ஆம் ஆண்டு பதவிப்பிரமாணம் செய்துகொணடார் என்பதை உறுதிப்படுத்துவதற்காக போலி வர்த்தமானி அறிவித்தலொன்று அச்சிடப்போவதாக கடுவெல ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் சட்டத்தரணி சுஜீவ சேரசிங்க பொறளை பொலிஸாரிடம் செய்துள்ள முறைப்பாடு தொடர்பாகக கேட்டபோதே அச்சகத் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.


இதேவேளை இந்த முறைப்பாட்டிற்கமைய நேற்றுமுன் தினம் பொறளை காவல்துறையனா் அரச அச்சகத்தை சோதனையிட்டதாகவும் ஆனால் சந்தேகத்திற்கிடமான முறையில் அங்கு எந்தவொரு ஆவணமும் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் காவல்துறை வட்டாரத்தகவலகள் தெரிவிக்கின்றன. (ந)


## சிறுவிளம்பரம்


**நல்லூர் ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகள் விழா**

**12-08-2005 ஸ்வாமிகள் ஜனன விழாவுடன் 17-08-2005 திருககதவு திறத்தல் தொடர்ந்து 21-08-2005 திருக் கதவு அடைத்தலுடன் விழா நிறைவு பெறுகின்றது. இசைக் கச்சேரி வழங்கவிரும்புவோர் முன் கூட்டியே அறியத் தரவும். (ஐ) - நிர்வாகி**


# நேற்று அமுல் படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் காரணமாக வெறிச்சோடிக்காணப்படும் யாழ்.நகரப்பகுதி...


















படங்கள்- தவராஜா

# இராசி பலன்

**06.08.2005**
**(ஆடி 21, சனிக்கிழமை)**
**பிரதமை முற்பகல் 11.07 மணிவரை**
**ஆயிலியம் காலை 7.57 மணிவரை**
**இராகுகாலம் 09.04 - 10.34 மணிவரை**
**சுபநேரம் 3.-04 -4.34 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | வியாபார நன்மை, காரிய இடையூறு, தாழ்ந்த சுபாவம், பூர்வ புண்ணிய கருமம். |
| இடபம் | கல்வியில் ஆர்வம், அற்பர் உறவு, பயந்த சுபாவம், முயற்சி தாமதம். |
| மிதுனம் | இனிய சம்பவம், அந்நியர் சந்திப்பு, புதிய பொருள் சேர்க்கை, காரிய அனுகூலம்.. |
| கடகம் | கடின வார்த்தை, பொருள் விரயம், உஷ்ணவியாதி, காரிய தாமதம். |
| சிங்கம் | நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தை, நண்பர்கள் உதவி, போசன சுகம். |
| கன்னி | பிதாசிந்தை, கோபப்படுதல், பிரயாணம், பணவிரயம். |
| துலாம் | கலந்துரையாடல், முயற்சி கைகூடும், தொழில் வருமானம், கீர்த்தி. |
| விருச்சிகம் | சுப நிகழ்வு, காரிய அனுகூலம், போசன சுகம், நல்ல செய்தி. |
| தனுசு | நல்ல செய்தி, உடல் உழைப்பு, புதிய முயற்சி, தன விரயம். |
| மகரம் | அச்சமான நிலை. அபகீர்த்தி, முயற்சி தாமதம், உடல் நலக்குறைவு. |
| கும்பம் | திடீர்பயணம், அபூர்வ சந்திப்பு, கலந்துரையாடல், விருந்துபசாரம். |
| மீனம் | பண வருவாய், சத்துருஜெயம், தேக நலன், காரிய சித்தி. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.

- வளவன்

# வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய தேவி ரதோற்சவ சிறப்புமலர் 06-08-2005



## பிரதமகுருவின் ஆசிச்செய்தி

ஆலயங்களில் நடைபெறும் மஹோற்சவங்கள் சமய நெறிவழியில் மக்கள் வாழ்வு நிலைபெறவும், நாட்டில் சாந்தி, சமாதானம், சுபீட்சம், அகம்சை ஆகியன பெருகவும் வழிசெய்கின்றன.

உற்சவம் என்பதற்கு மேலான பெருஞ்செல்வம் என்பது பொருளாகும். எனவே இறைவழிபாடு மூலம் இறையருளாகிய பெருஞ்செல்வத்தைப் பெறமுடியும். செல்வன் கழலேத்தும செல்வம் செல்வமே என்பது திருமுறை. ஆலகாலமுண்ட நீலகண்டனின் சக்தியாக விளங்கும் வாலாம்பிகா தேவியின இரதோற்சவம் இன்று நடைபெறுகிறது.

சீலமிகு தேவியின் கோலாகலக்காட்சியை இன்று தேரிலே தரிசிக்கின்றோம். சித்திரத்தேரில் முப்புரங்களை எரித்து ஆன்மாக்களாகிய எம்மைப் பற்றி நிற்கின்ற மும்மலங்களை நீக்கும் தன்மையை உள்ளடக்கிய விழா இரதோற்சவம்.

தமிழ் வளர்த்த நாவலருக்கு தண்ணருள் சுரந்த அம்பிகையாம் வண்ணை வைத்தீஸ்வரன் தேவி வாலாம்பிகையின் திருவருள் வையத்தை வாழ வைக்க மக்கள் யாவரும் பெருவாழ்வு வாழ இறைவியின் சரணத்தை வணங்க' ஆசியை தெரிவிதது்க்கொள்கிறேன்.

*"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"*

**வேதாகம கிரியாபானு**
**சிவஸ்ரீ சோ.க.பிரணதார்த்திஹரக் குருக்கள்**






கிருஷ்ணா அடைவு கடை

KRISHNA POWN BROKER

370, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P - 021 222 5046

370, K.K.S.ROAD,
JAFFNA.

TRACTOR SPARES

Importers and dealers in Tractor spare Parts, Specialist in Massy Ferguson Engineers.

7,Kannathiddy Road,
Jaffna T.P:021 222 5055

நவீன வடிவமைப்புகளில் அழகிய தங்க நகைகள் செய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்

விமலா கோல்ட் கவுஸ்

தங்கப் பவுண் நகை வியாபாரம்

ஓடர் நகைகள் 22 கரட் உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

உரிமையாளர்: இராசலிங்கம் உதயகுமார்
372, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்குச் சிறந்த ஸ்தாபனம்

பிரணகா நகைத் தொழிலகம்

அசல் 22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

68/A, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
(ஊர்காவற்றுறை.)

*கணனி மூலம் தமிழ், ஆங்கில தட்டச்சு
*ஓவ் (f) செற் பிறின்ட் *றோணியோ

மற்றும் சகலவிதமான அச்சுவேலைகளும் வேண்டிய வர்ணத்தில் சிறந்த முறையில் குறித்த தவணையில் குறைந்த செலவில் உங்கள் விருப்பத்திற்கேற்ற வகையில் செய்துகொள்ள

தயா அச்சகம்

T.P:021 222 2881
138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


# நாவாந்துறைப் பகுதியில் விரைவில் தண்ணீர்த்தாங்கி நிறுவும் நடவடிக்கை

## யாழ்.மாநகர ஆணையாளர் தெரிவிப்பு

நாவாந்துறைப் பகுதியில் தண்ணீர்த் தாங்கி ஒனறு நிறுவப்படவிருப்பதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

நாவாந்துறைப் பகுதிக்கு யாழ்.நகர் பிரதான தண்ணீர் தாங்கியில் இருந்தே குடிநீர்குழாய் மூலமாக விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

நாவாந்துறை மக்கள் முற்றுமுழுதாக குழாய் மூலமான குடிநீர் விநியோகத்தையே நம்பி இருப்பதனால் பிரதான தாங்கியின் நீர் கொள்ளவு இப்பகுதி மக்களின் குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதாதுள்ளது.

அத்துடன் மக்களின் தேவைப்பாட்டிற்கேற்ப நீர்வழங்கல் குழாய்கள் செல்லும் பாதைகளும் அமைந்திராததினால் இப் பகுதி மக்கள் தமக்கான குடிநீரை திருப்திகரமாக பெறமுடியாத நிலை காணப்படுகின்றது.

இதனைக் கவனத்தில் கொண்டே நாவாந்துறையில் தனியான ஒரு தண்ணீர் தாங்கியை நிறுவி அதன்மூலம் அப் பகுதி மக்களின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுககப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-44)

# மந்திகை வைத்தியசாலையில் மருத்துவர் பற்றாக்குறை:மக்கள் பெரும் சிரமம்

(பொன்னாலை)

மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலைக்கு வைத்தியர்களை நியமிக்க வேண்டுமென வைத்தியசாலை வட்டாரத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலையில் மருத்துவர்கள் பற்றாக்குறை நிலவி வருவதால் மக்களின் மருத்துவத் தேவைகளை நிறைவு செய்வதில் பாரிய சிககலை எதிர்நோக்கி இருப்பதாக அவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பிரசவ வைத்திய நிபுணர் இம் மருத்துவமனையில் பணியாற்றியும் மயக்க மருந்து ஏற்றும் நிபுணர் தற்பொழுது இல்லாமையால் பிரசவத்திற்கு வரும் தாய்மார்கள் யாழ. போதனா வைத்தியசாலைக்கே அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

மேலும் சத்திர சிகிச்சை நிபுணர்கள் பற்றாக்குறை நிலவிவருவதாகவும் பதினைந்து மருத்துவர்கள் பணியாற்றிய இடத்தில் தற்பொழுது ஐந்து மருத்துவர்களே பணியாற்றி வருவதாகவும் இதனால் இப்பிரதேச மக்களின் மருததுவத் தேவைகளை நிறைவு செய்வதில் பின்னடைவு ஏற்பட்டு இருப்பதாகவும் தெரிவிககப்படுகின்றது. (அ-49)

## ஆடிப்பூரம்

வட்டுக்கோட்டை - தெக்கணப்பாய் கண்ணகி அம்மன் ஆலய கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில நாளை ஞாயிற்றுக்கிழமை கண்ணகாம்பிகா தேவிக்கும் கண்ணகி அம்பாளுக்கும் ஆடிப்பூர பூர்வகர்ம ருது சாந்தி வைபவமும் நடைபெறவுள்ளது. (அ-7)

## இன்று ஒரு தகவல்

# தப்பிக்க என்ன வழி?

ஒரு குரு உட்கார்ந்திருக்கிறார். அவருக்கு முன்பாக ஒரு சீடன் வந்து நின்றான். "சுவாமி! எனக்கு ஒரு பிரச்சினை" என்றான். "உனக்கு என்ன பிரச்சினை? விபரமாகச் சொல்" என்றார் குரு. "சுவாமி இந்த ஊரில ஒரு பெரிய செல்வந்தர் இருக்கிறார். அவர் வெளி நாடுகளுக்கு யாத்திரை போகப்போகிறார். அவர் திரும்பிவர 10 மாதங்கள் ஆகும்" என்றான்.

"அவர் வெளிநாடு போவதானால் உனக்கு என்ன சிக்கல் ?" என்று கேட்டார் குரு. "அந்த செல்வந் தருக்கு ஒரே பெண்பிள்ளை அவரை எனது பாதுகாப் பில் விட்டுச் செல்ல வேண்டும் என்று ஆசைப்படுகிறார்" என்றார். 'போகட்டும் அதனால் என்ன?' என்றா குரு. இப்போது சீடன் சொன்னான் "சுவாமி என்னை இந்த ஊரில் எல்லோரும் நேர்மையானவன் என்று சொல்கின்றனர். அதற்குத் தகுந்தமாதிரித்தான் என் மனதையும் பழக்கப்படுத்தி வைத்திருக்கிறேன்.

இருந்தாலும் என் மீதே எனக்கு முழு நம்பிக்கை இன்னும் வரவல்லை. பத்து மாதகாலத்திற்கு அந்தப் பெண்ணை நான் பாதுகாப்பாக என் வீட்டில் வைத் திருப்பதென்றால்... எனககுப் பயமாக இருக்கிறது... அதனால் இந்தப் பிரச்சினை தீர என்ன வழி? நீங்கள் தான் சொல்ல வேண்டும்?" என்றான்.

இப்போது குரு சொன்னார் "இதோ பாரப்பா... இது போன்ற சிக்கலிலிருந்து தப்பிக்கும் ரகசியம் தெரிந்த ஒருவன் இருக்கிறான் அவனை எனக்குத் தெரியும் நீ நேராக அவனைப் போய்ப்பார்" என்று கூறி அவனைப பற்றி எல்லா விபரத்தையும் கூறி அவன் இருக்கும் இடத் தையும சொன்னார்.

குரு அடையாளம் சொன்ன அந்த ஆள் ஒரு பைத்தியக்காரன். பக்கத்துக் கிராமத்தில் அவன் இருக்கிறான். "சுவாமி நீங்கள் கூறிய ஆசாமியைப் பற்றி நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். அவன் ஒரு பைத்தியக்காரன் என்று அறிந்தேன். அவன் எப்படி எனக்கு இந்தப் பிரச்சினையில் உதவ முடியும்?" என்றான் சீடன். "அதைப்பற்றி நீ ஒன்றும் கவலைப்பட வேண்டாம் நீ நேராக அவனிடம் போ. ஆனால் மிகவும் கவனமாக அவனைக் கவ்னிக்க வேண்டும்" என்றார் குரு.

குருவே சொன்னதன்பின் எப்படி சும்மா இருக்க முடியும்? நேராக அடுத்த ஊருக்குப் போனான். அவன் அந்தப் பைத்தியக்காரனைப் பார்த்தான். இவன் போய்ச் சேர்ந்த சமயதத்தில் அந்தப் பைத்தியக்காரனுக்கு ஒரு சிறுவன் மதுவை ஊற்றிக் கொடுத்துக் கொண்டிருந்தான். அவனும் அதைவாங்கிக் குடித்தான். இதைப் பார்த்ததும் இந்த சீடனுக்கு என்னவோ போலாகி விட் டது. இருந்தாலும் குரு சொல்லியனுப்பியிருக்கிறா என்பதனால் அவனருகே நெருங்கினான்.

அந்த ஆளைப்பார்த்து 'ஐயா! தயவு செய்து இப் போது என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று சொல்லுங்கள்?' என்று கேட்டான். இப்போது அந்த ஆள் சொன்னான் 'இந்த சிறுவன் எனது மகன். இன் னும் அருகே வந்து பார் இவன் ஊற்றிக் கொடுப்பது மது அல்ல வெறும் தண்ணீரைத் தான் நான் வாங்கிக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன்' என்றார்.

"அப்படியென்றால் எதற்கு நீங்கள் மது அருந்து வது போல் பாசாங்கு செய்கிறீர்கள்? நீங்கள் கையில வைத்திருக்கும் கோப்பை மது அருந்துவதற்கு உள்ள கோப்பைதானே அதில் ஏன் தண்ணீரை ஊற்றிக் குடித்துக் கொண்டிருக்கிறீர்கள்? எனக்கு ஒன்றும் புரிய வில்லை. நீங்கள் எதற்காக இப்படி இருக்கிறீர்கள்?' என்று கேட்டான். "நான் இப்படி இருப்பதனால் தான் ஒருவர் வெளிநாட்டுக்கு யாத்திரை செல்லும் போது அவரது மகளை எனது பொறுப்பில் விட்டு விட்டுப்போக விரும்பமாட்டார். அதற்கு இது ஒரு உபாயம்" என்றான் அந்த ஆள்.

இநதக் கதை வேடிக்கையாகத் தெரிந்தாலும் இது போன்ற பல சந்தர்ப்பங்களில் நடந்துதான் சில சிக்கல்களிலிருநது தப்பிக்க வேண்டியிருக்கிறது.

ஒரு குடும்பத்தலைவர் இருந்தார். அவருக்குத் திடீர் திடீரென்று காக்காவலிப்பு வந்து விடும். கீழே விழுந்து கையைக் காலை உதைத்துக்கொள்வார். உடனே அவரது மனைவி ஓடி வந்து சாவிக்கொத்தை அவரது கையில் கொடுப்பார். அதன் பின் வலிப்பு நின்று போய் விடும். எழுந்து விடுவார்.

நான ஒருநாள் அவரிடம் கேட்டேன் "ஏன் சார் காக்கா வலிப்புக்கும் கையில் சாவிக்கொத்தைக் கொடுப்ப தற்கும சம்பந்தமில்லை என்று டாக்டர்கள் சொல்கின்றனர். உங்களுக்கு மட்டும் அது எப்படிச் சரியாகிவிடுகிறது?" எனக்கேட்டேன்.

அதறகு அவர் "அடபோங்கள் சார் நான் சும்மா அடிக்கடி காககா வலிப்பு வந்தது போல கீழே விழுந்து உதைததுக் கொள்வேன் அது ஒரு உபாயம். அதைத் தவிர வேறு எந்த வழியிலும் எனது மனைவியின கையில் உள்ள பெட்டிச் சாவியை என்னால் வாங்க முடியாது" என்றார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

---

### இணுவில் படுகொலைச்சம்பவம்

# சம்பந்தப்பட்ட இராணுவத்தினர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்

## யாழ். மாவட்ட சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா இராணுவத்தின் அடாவடித்தனமான செயலை யாழ். மாவட்ட சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் ஒன்றியம் வன்மையாகக கண்டித்துள்ளது.

இது விடயம் தொடர்பில் அவ் ஒன்றியம் கண்டன அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

வெளியிடப்பட்டுள்ள கண்டன அறிக்கையில், ஸ்ரீலங்கா இராணுவத்தின் அடாவடித்தனமான செயலுக்கு இன்னுமோர் இளைஞன் பலியாகியுள்ளான்.

04.08.2005 நண்பகல் 1.00மணியளவில் இணுவில் குமரன் சிகை அலங்கார நிலையத்தில கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஜெயசீலன் சாந்தரூபன் என்பவர் இராணுவத்தினரால் சுட்டுக்கொலலப்பட்டதை யாழ். மாவட்ட சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

படுகொலைசெய்யப்பட்ட இளைஞனுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அனைத்து சிகை அலங்கார நிலையங்களிலும் கறுப்புக்கொடிகளை பறக்கவிட்டும் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும் நாள் ஒன்றியதால் அறிவிக்கப்படும் போது சிகை அலங்கார நிலையங்களை மூடி இறுதி நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

இப்படுகொலையை மேற்கொண்ட இராணுவத்தினர் மீது கடும் நடவடிக்கை எடுத்து அவர்கள் சட்டத்தின முன் நிறுத்தப்பட வேண்டும்.

நீதிகிடைக்காவிட்டால் இராணுவத்தினருக்கு எதிராக மக்கள் போராட்டம் தொடரும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ற)

# இராணுவம், பொலிஸாரின் கை, கால்கள் சுற்றுநிருபங்களால் கட்டப்பட்டுள்ளன

## அனுர குமார திஸநாயக்கா சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இராணுவம் மற்றும் பொலிஸ் அதிகாரிகளின் கைகால்கள் தற்போது கட்டப்பட்ட நிலையிலேயே இருக்கின்றன.

இதனாலேயே இராணுவத்தினருக்கும் பொலிஸாருக்கும் இவ்வாறான அசம்பாவிதங்கள் இடம பெறுகின்றன.

கடந்த வியாழக்கிழமை இணுவிலில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் பின்னர் நடைபெற்ற களேபரத்தில் கடத்திச் செல்லப்பட்டு வெட்டிக் கொலை செய்யப்பட்ட யாழ். பொலிஸ் அத்தியட்சகர் சாள்ஸ் விஜேவர்த்தன மரணம் பற்றி ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸநாயக்கா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் இணுவில் படுகொலைச் சம்பவம் குறித்து மேலும் கருத்து வெளியிடுகையில்,

தமது சிப்பாய்களும் அதிகாரிகளும் கொலை செய்யப்படும்போது அவர்களது கைகால் களைச் சுற்று நிருபங்கள் மூலம் கட்டிப்போடுபவர்கள் இயலாத, நாட்டைப்பற்றிச் சிந்திக்காத, கொள்கை அல்லாத, தமது சொந்த நலனை மட்டுமே கருத்தில் கொள்பவர்கள்.

இவ்வாறானவர்களின் செயற்பாட்டால் பாதிக்கப்படுவது நாடும் பொலிஸ், இராணுவத்தரப்புக்களும் தான்.

எனவே சுற்று நிருபங்களை ஏற படுததுபவர்கள் இந்நிலமையை கவனத்தில் எடுத்து பொலிஸ், இராணுவத்தினருக்கு சாதக மான சூழலை ஏற்படுத்தவேண்டும் என்றார்.(ற)

# ஜே.வி.பியினருடன் கூட்டணியை ஏற்படுத்தியது சமாதான நடவடிக்கைகளை உடைத்தெறிவதற்கல்ல

## அவசரப்பட்டு அரசை விட்டு ஜே.வி.பி வெளியேறிவிட்டது என்கிறார் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா

(கொழும்பு)

கூட்டணியை ஏற்படுத்தியது சமாதான நடவடிக்கைகளை உடைத்தெறிவதற்கல்ல. யுத்தத்தினால் கெரில்லா அமைப்புக்களுக்கு கிடைக்கும நன்மைகள் அதிகம். சமாதானத்தின் மூலமே கெரில்லா அமைப்புக்களை தாக்க முடியும் என ரயில் போக்குவரத்துத்துறை அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி. அரசாங்கத்தை விட்டுச் செல்ல அவசரப்படுவிட்டது. ஜே.வி.பி தனது கட்சியை கட்டியெழுப்ப முயல்வதைப்போலவே நாமும் எமது கட்சியைக் கட்டியெழுப்ப முயல்கிறோம். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் ஜே.வி.பிக்கு ஏற படும் நிலை என்ன என்பது பற்றி நினைததுப் பார்கக வேண்டும் என்றும் அமைச்சர் மேலும் தெரி விததுள்ளார்.

நாம தனித்துவிட்டால் தோறகவும் கூடும். ஜே.வி.பியுடன் இணைந்ததாலேயே எமக்கு ஆட்சி அதிகாரம கிடைத்தது. பிரதான கட்சியுடன் இடது சாரிக்கட்சிகள் இணைந்தால் எம்மால் வெற்றி பெற முடியும் என்பதையே அது எடுத்துக் காட்டு கிறது. இந்தத்தேர்தல் முறைக்கமைய எந்த வொரு கட்சிக்கும் இனி மேல் பெரும்பான்மை அதிகாரம் கிடைக்காது.

இந்த அரசியல் அமைப்பை மாற்ற ஐக்கிய தேசியக் கட்சிக்கு விருப்ப மில்லை. எதிர்காலத்தில் ஜனாதிபதி அதிகாரத்தைர் பயன்படுத்தியே அரசாங்கத்தைக் கொண்டு நடத்த முடியும்.

போக்குவரத்து அமைச்சில் பணி புரிகையில் பல பிரச்சினைகள் எழுந்தன. அங்கு நான் 115 வேலை நிறுத்தப்போராட்டங்களுக்கும் முகம் கொடுத்தேன். போக்குவரத்து அமைச்சுடன் சம்பந்தப்பட்ட 114 தொழிற்சங்கங்கள் உள்ளன.

போக்குவரத்துச்சபையில் இருக்கும் 3,000 பேரூநதுக்களுக்கு 40,000 ஊழியர்கள் உள்ளனர். 5,000 ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்க 650 இலட்ச ரூபா செலவாகிறது.

அவ்வாறான அமைச்சிலேயே எனக்குப் பணியாற்ற வேண்டி ஏற்பட்டது. நான் அமைச்சராக உள்ளபோதிலும் எனது பேத்தியை ஒரு பாடசாலையில் சேர்ப்பதற்கு என்னால் முடியாமல் போனது. வாக்களர்கள் எனது சொந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கல்ல என்னை நாடாளுமன்ற உறுப்பினராக்கியது. அரசியல் வாதிகள் தங்களின சொந்தப் பிரச்சினைகளை ஒதுக்கி வைத்து விட்டு மக்களுக்காகச்செயற்பட வேண்டும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ற)

# சமையல் எரிவாயு பால்மாவகைகளுக்கான வற்வரி நீக்கம் - அரசாங்கம் முடிவு

(கொழும்பு)

சமையல் எரிவாயு மற்றும் பால்மா வகைகள் ஆகியவற்றுக்கு தற்போது அறவிடப்படும் 15 வீத பெறுமதிசேர் (வற்) வரியை நீக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம அமைச்சரவைக்கு சமர்ப்பித்த ஆலோசனையை ஏற்றுகொண்டே அரசாங்கம் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிப்பதற்காக நேறறு முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியாளர் மாநாட்டின்போதே இந்தத் தகவலை அமைச்சரவைப் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தள்ளார். சமையல் எரிவாயு மற்றும் பால் மா வகைகளின் பெறுமதி சேர் வரி நீக்கப்பட்டுள்ளதால் அந்தப் பொருட்களின் விலை குறையும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பொருட்களின் விலையைக் குறைக்காத வர்த்தகர்களுக்கு எதிராக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினால் கடும் நடவடிககை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(ற-9)

# கவிதைக் கலசம்

## உறவுகள் காணும்வரை

சுனாமி வந்தது
உயிர்களைப் பறித்தது
என்னையும் நிர்க்கதி ஆக்கினதே
தனிமையில் இருந்து பார்த்திருப்பேன்
நான் எந்தன் உறவுகள் காணும்வரை...

ம.கீதா,
யாழ்ப்பாணம்.

## எதிர் நீச்சல் போடு!

சுட்டிப் பையா!
கரையோரம் கணநேரம்
காத்திருப்பு ஏன்?
துள்ளிக் குதித்துக்
கடல் அலையில்
எதிர் நீச்சல் போடு
'சுனாமி'யையும் வெல்லும்
துணிவைத் தேடு!

சொ.நித்தியா,
யாழ்ப்பாணம்.

## சிலையானாயோ...?

சீறிவரும் அலை கண்டு
சிலையானாயோ? ~ சிறுவனே
சுனாமிப் பேரலை அள்ளிச் சென்ற ~ உன்
சகோதரனை நினைந்து ~ நீ
சிந்தனையிலாழ்ந்தாயோ?

கி.குகநாதன்,
தம்பசிட்டி.

## யாரை எண்ணி...?

சிறுவா!
ஆற்றோரம் அமைதியாய்
ஆழ்ந்த யோசனை என்ன?
அலைகடலுள் அமிழ்ந்து போன
அன்புப் பெற்றோரின் எண்ணமோ?

P.பவானி,
கொக்குவில்.

## மௌனத்தின் தேடல்கள் - 66



## ஏக்கம்

சுனாமியின் அவலத்தால்
சுற்றம் இழந்து
சுகம் இழந்து
சுதந்திரம் இழந்து
சுருண்டு இருக்கும்
சுள்ளிப் பையனின்
ஏக்கம் யார் தீர்ப்பார்?

திருமதி. S.பாக்கியநாதன்,
வட்டுக்கோட்டை.

## எங்கே அவர்கள்?

கடல் தாயே! அன்று
தோழர்களாய் நாம் கூடி
நீ அடித்துவரும் கிளிஞ்சலை
பொக்கிசமாகச் சேகரித்து மகிழ்ந்தோம்
சிறுவர் நாம் கூடி உன்மடியில்
தவழ்ந்து விளையாடினோம்
இன்று சுனாமியாய் நீ எழுந்து
என் தோழர்களை
என்னிடமிருந்த பிரித்துவிட்டு
அமைதியாக ஒய்வெடுக்கிறாயே?
எங்கே அவர்கள்?
என்னையும் அழைத்துச் செல்!
அவர்களுடன் நான்
விளையாட வேண்டும்
அலைகடலே!

S.கஜசங்கவி,
இணுவில்.

## ஏக்கம் தீராயோ?

கோபம் கொண்ட கடலே!
கொள்ளை கொண்டாய்!
கொண்ட உறவுகள் எங்கே?
கொண்டு வந்து தா எம் - உறவை
தருவாய் என்ற ஏக்கத்தில்
தவிக்கின்றேன் தனிமையில்
என் நிலை பாராயோ
ஏக்கம் தீராயோ?

த.நா.பிள்ளையார்,
மூளாய்.

## அலைகடலே!

அந்திநேரத்தில் அமைதியாக
அலை அடித்துச் செல்லும்
நீ தான்
எம்மவரை காவு கொண்டாயா?
நம்ப முடியவில்லை!

N.நிகா, உடுவில்.

## மௌனத்தின் தேடல்கள் - 68



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில்தோன்றும் உள்ளத்து உணர்வுகளை **மிகச் சிறிய** கவிதைகளாக்கித் **தபால் அட்டையில்** வலம்புரி-சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள். **கிடைக்கவேண்டிய இறுதித் திகதி** - 07.08.2005

அனுப்பவேண்டிய முகவரி:- மௌனத்தின் தேடல்கள் - 68

**வலம்புரி - சங்குநாதம்**

இல.3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.

## புரியாத உடன்படிக்கை

போர் தான் தீர்வு என
எழுந்தது யுத்தம்
போதுமடா என
உரைத்தது
மூன்றாம் மத்தியஸ்தம்
புரியாத புண்ணியவான்கள்
புரிந்திட வரைந்தது
புரிந்துணர்வு உடன்படிக்கை
மௌனம் ஆனது - யுத்தம்
கண்டது சமாதான
உடன்படிக்கை
ஆண்டுகள் மூன்றாகியும் - ஏது
மௌனம் மௌனம்...
புரியவில்லையே?
மௌனமாய் பல யுத்தம்
கொலைகள் சதித்திட்டங்கள்
இவைதான்
சமாதான உடன்படிக்கையில்
பொதிந்திட்ட
தீர்வுத் திட்டமா?

V.கிரிதரன்,
மானிப்பாய்.

## பாதகமான பார்

மனதிற்கு நிம்மதி வேண்டி
கலைஞனாகலாமென்று போனேன்
கழுத்தையே நெரித்துக் கொல்லுமாப்போல்
போட்டி பொறாமைகள்
புறணி என நிரம்பி வழிந்தன ஆங்கே

எழுத்தாளனாக ஆகலாமென்று
எழுது கோலை ஏந்தி...
ஊடகவியலாளராகலாமென்று
எத்தணித்தேன்
கடத்திச் சென்றே படுகொலை....
பாதகமான இப்பாரில்
நிம்மதியில்லாத இம்மண்ணில்
பிறந்தது தான் நாம் செய்த பாவம்

ஜெ.சுபாஜினி.

## சொல்லாமல் சென்றவளே!

நிலவொன்று சென்றது
நினைவொன்று தந்தது
கனவொன்றில் கண்டேன்
அவள் முக அழகை
காதல் கொண்டேன்
காதலி ஆனாள்
கவி ஒன்று எழுதினேன்
என் ரசிகையானாள்
யாருக்குத் தெரியும்...
பெண் இரும்புகளை
வெளிநாட்டுக் காந்தங்கள்
கவருமென்று....?
கவரும் போதாவது
சொல்லியிருக்கலாம்
நான் போகிறேன் என்று
ஆனால்
சொல்லாமலே சென்ற நீ
என்னை விரும்பாமலே
விட்டிருக்கலாம்!

நிதுசி,
அல்வாய்.

## கோலங்கள்

மாக்கோலம்
மலர்க்கோலம்
தேங்காய் பூக்கோலம்
இரவுகளை விரட்டும்
திங்கள் உறவின்
தீபக் கோலம்
மங்கையர் கைகளின் ஜாலம்
வாழ்க்கை ஒளிபெற
வண்ணக் கோலங்கள்
மகிழ்ச்சி குன்றிடாமல்
உற்பத்தி செய்யப்படுகின்றது
கண்களிற்கு விருந்தளிக்கும்
கன்னியவள் சிரிப்பும்
போடாத கோலம்தான்
அவள் நடையும் இடையும்
அதிலாடும் பின்னலும்
அசைவுறும் கோலம்
அவள் வார்த்தைகள்
மெட்டுக்கட்டும்
இசைக்கோலம்
இன்பத்துடன் இல்லம் கொழிக்கும்
அழகுக்கோலம் - அவள்
நெறிதவறின் அதுவே அலங்கோலம்!

ஜோ.ஜெஸ்ரின்.

## புரிந்துகொள்!

உன் பின்னாடி வந்தேன்
காதலிப்பதற்கல்ல
உன்னருகில் நெருங்கினேன்
முகவரி கேட்பதற்கல்ல
உன் வெட்கத்தை அறிந்தேன்
என்றும் நட்புடன இருப்பதற்கு.

தி.சாரங்கன்,
கல்வியங்காடு.

## பேனா

என் மன எண்ணங்களை
ஏட்டில் பதியவைக்க - தன்
உதிரத்தையே தந்து
உயிர் நீத்திடும்
உத்தம தோழன்

## காகிதம்

என் வலிகளை நான்
தீட்டிட தன் உடலையே
காயமாக்க அனுமதிக்கும்
அன்புத் தோழன்

## வானம்

ஏழை வீட்டின் கூரை
பணக்காரன் வீடு கட்டும் நிலம்.

கு.தாட்ஷாயினி, கலட்டி.

## மனிதம்

மனிதர்கள்
அவர்கள் மனிதமே இல்லாதவர்கள்- அது
தவறென்றிருந்தேன்
நேற்றுவரை...
இன்று
என் நினைவே தவறென்பதை
உணர்நதபோது
என்னுள் இருந்த மனிதமும்
மரணித்துப் போய்விட்டது!

க.தர்சினி,
கல்மடுநகர்.

# மரணத்தின் நிழலில்

## மீள் பார்வை சதாம் கதை 25

பி.ஜே.ராஜய்யா

## பேரழிவு ஆயுதத் தாக்குதல்

பாலஸ்தீனத்தை ஆக்கிரமித்துக் கொண்டு அட்டகாசம் செய்துவரும் இஸ்ரேல், ஏற்கனவே அதிக சக்தி வாய்ந்த அனுகுண்டுகளை தயாரித்து வைத்திருக்கிறது. ஆனால் இஸ்ரேலை எதிர்க்கும் அரபு உலகத்தில் எந்த நாட்டிலும் அனுகுண்டு மருந்துக்குக்கூட கிடையாது. அதனால்தான் இஸரேல் தனது அண்டை அரபு நாடுகளை அடாவடித்தனமாக மிரட்டிக் கொண்டிருக்க முடிகிறது.

இஸ்ரேலை மிரட்டி பாலஸ்தீனத்தை விடுவிக்க வேண்டுமானால் நம்மிடமும் அனுகுண்டு இருக்க வேண்டும் என்பது சதாமின் நெடு நாள் கனவு.



போர்க்களத்தில் இராணுவத்தினரோடு சதாம்

இந்த கனவை நனவாக்க 1976ல் அவர் துணை ஜனாதிபதியாக இருக்கையில் பாரீஸ் சென்றார். பிரெஞ்ச் அரசுடன் ரகசிய பேச்சு வார்த்தை நடத்தினார். இதன் விளைவாக ஈராக்குக்கு அனு உலையையும் தொழில் நுட்ப உதவியையும் விலைக்குக் கொடுக்க பிரான்ஸ் முன்வந்தது.

இராணுவ ரீதியில் தன்னளவுக்கு வேறு எந்த அரபு நாடும் பலம் பெற்று விடக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்த இஸ்ரேல், பாக்தாத்தில் பிரான்ஸ் தொழில்நுட்ப உதவியுடன் அமைக்கப்பட்ட அனு உலையை திடீர் தாக்குதல் மூலம் நிர்மூலமாக்கிவிட்டது.

தொழில்நுட்ப உதவி செய்தாலும், ஸ்பாட்டிலிருந்த பிரெஞ்ச் இன்ஜினியார் ஒருவர் உயிரிழந்ததனாலும் இஸ்ரேலின் தாக்குதலை பிரான்ஸ் வன்மையாகக் கண்டித்தது.

இது சதாமுக்கு சற்று ஆறுதலாக இருந்தது. ஆனால் அந்த ஆறுதல் நீடிக்கவில்லை...

காரணம்...

தாக்குதல் நடத்துவதற்கு முன் இஸ்ரேல் தன் திட்டத்தை பிரான்ஸ் அதிபர் மிட்டராண்டுக்கு தெரிவித்துவிட்டுத்தான் தாக்குதல் நடத்தியிருக்கிறது. அப்போது பிரான்ஸ் அதிபர் இஸ்ரேலின் திட்டத்தை ஆட்சேபிக்கவோ அல்லது அது பற்றி சதாமிடம் சொல்லி உஷார்படுத்தவோ இல்லை என்ற விவரம் பின்னால் சதாமுக்கு தெரிய வந்தது.

பிரான்ஸ் போன்ற ஏகாதிபத்திய நாடுகளில் இரட்டை வேடம் கண்டு ஏற்கனவே குமுறிக் கொண்டிருந்த சதாமுக்கு இந்நிகழ்ச்சி மேலும் மனஉறுதியை ஏற்படுத்திவிட்டது. அனுகுண்டு தயாரிக்க வேண்டும் என்ற எண்ணத்தை அவர் கைவிடவில்லை...அனுகுண்டு தயாரித்தே தீரணும் இஸ்ரேல் நம் நாட்டுக்குப் பக்கத்துல இல்லாட்டி என்ன? நாடு விட்டு நாடு பாயும் ஏவுகணைகளையும் நாமே தயாரிக்கனும் தொழில்நுட்ப உதவிக்காகக் கூட எந்த பணக்கார நாட்டையும் சார்ந்திருக்கக் கூடாது முயற்சி பண்ணினா நம்மால் முடியாதா ஹே- இஸ்ரேல் எனக் கொரு காலம் வரும் அன்னிக்கி நான் குட்டக்குட்ட நீ குனிவாய் உன் கொட்டம் ஒடுங்கும்...

இராணுவத்தின் சுய தேவை பூர்த்திக்காக நீண்ட காலத்திட்டம் தயாரித்தார்.

போராயுதங்களை சுயமாய் செய்து கொள்வதற்குத் தேவையான பாகங்களையும், தொழில் நுட்பங்களையும் அமெரிகக் தனியார் கம்பெனிகளிடமிந்தும்,மேலை நாடுகளிலிருந்தும் வாங்க ஈராக் அரசு ரகசியமாக டம்மி கம்பெனிகள் போலி வியாபார "ஏஜென்சிகளை உருவாக்கியது இவை வெளிநாடுகளிலிருந்து ஆயுதங்கள் வாங்கும். ஆனால் யாருக்காக வாங்குகிறது. என்பது சதாமை தவிர வெளியில் யாருக்கும் தெரியாது.

இப்படி வாங்கிக்குவிக்கப்பட்ட உதிரிப் பாகங்கள் ஈராக்கில் ஒன்று சேர்க்கப்பட்டு, போர்க் கருவிகளாக ஈரான் மீது வீசப்பட்டன.

ஈரான-ஈராக் போர் சில நாட்களுக்குள் முடிந்துவிடும் என்று தான் சதாம் நினைத்தார். ஆனால் ஈராக்கை விட மூன்றரை மடங்கு பெரியதும் நான்கு மடங்கு கூடுதலாய் மக்கள் தொகை கொண்டதுமான ஈரான் அவரது கணக்கை பொய்க்கணக்கு ஆக்கிவிட்டது.

ஈரானில் வசிக்கும் அரேபியர்கள் ஈராக் இராணுவத்தினரை தங்களை மீட்க வந்திருக்கும் ரட்சகர்களாகப் பாவித்து வரவேற்பார்கள் என்று அவர் எதிர்பார்த்தார். யுத்தம் தொடங்கியதுடன் பெரும்பாலான ஈரான் இராணுவத்தினர் ஈராக் இராணுவத்தோடு சேர்ந்து கொள்வார்கள் என்றும் அவர் நம்பினார்.

ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை ஈரானிய அரேபியர்கள் இனப்பற்றை விட தேசப் பற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து, போரில் ஈரான் இராணுவத்தின் பக்கம் உறுதியாக நின்றார்கள் கொமேனியின் ஆட்சியை விரும்பாத ஈராக்கியர்கள் கூட தேசபக்தி காரணமாக ஈராக் இராணுவத்தை எதிர்த்துப் போரிட தாமாக முன் வந்தார்கள்.

விளைவாக ஈரானின் தெற்கு மற்றும் மத்திய பகுதிகளில் சுமார் பத்தாயிரம் சதுர மைல்களுக்கு அப்பால் ஒரு அங்குலத்தைக்கூட ஈராக் இராணுவத்தால் ஆக்கிரமிக்க இயல வில்லை.

நாட்கள் செல்லச் செல்ல ஈரான் இராணுவம் தீவிரமாகப் போரிட்டு இழந்த பெரும்பாலான பகுதிகளை மீட்டது.

சதாம் திகைத்தார்.

போர் நிறுத்தம் செய்துகொள்ள தயாராக இருப்பதாக அறிவித்தார்.

ஆனால் ஈராக்கில் சதாம் ஆட்சியைத் தூக்கி எறியும்வரை போர்நிறுத்தம் இல்லை என்று ஈரான் கொக்கரித்தது. தாக்குதுலைத் தீவிரப்படுத்தியது. ஈராக்குக்குள் புகுந்தது. பாஸ்ரா நகரை கைப்பற்ற முயன்றது. பதினைந்து நாட்கள் கடுமையாகப் போரிட்டு 32 சதுர மைல் பரப்பைக் கைப்பற்றியது. பாஸ்ரா-பாக்தாத் நெடுஞ்சாலையைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர எத்தனித்தது.

சதாம் பதறினார்.

இந்த நெடுஞ்சாலையைக் கைப்பற்ற அனுமதித்து விட்டால் அடுத்தசில தினங்களில் தலைநகர் பாக்தாத் எதிரி வசம் என்கிற ஆபத்தான நிலைமை...

வேறு வழியில்லை...

பேரழிவை ஏற்படுத்தும் ரசாயன ஆயுதங்களை முதல் முறையாகக் கையிலெடுத்தார் சதாம்.

தலைநகரை நோக்கி முன்னேற திட்டமிட்டிருந்த ஈரான் இராணுவத்தினர் மீது ரசாயன ஆயுதத் தாக்குதல் தொடுத்தார்.

ஆயிரக்கணக்கான ஈரான் இராணுவத்தினர் கொன்று குவிக்கப்பட்டனர்.

இதைப்பார்த்து உலக நாடுகள் அதிர்ந்தன. ரசாயன ஆயுதங்களை பயன்படுத்தியதற்காக சதாமை அவை கண்டித்தன.

ஆனால் அகம் மகிழ்ந்தது.

காரணம்..?

அது தான் அமெரிக்கா...!

(தொடரும்)

# கட்சிகளையும் வர்ணங்களையும் மறந்து அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

## அர்ஜூன ரணதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஒரு தரபபினிடம் இணைந்து கொள்ளும் தேவைப்பாடு அரசாங்கத்திற்கு இருந்தால் அதற்காக தமது பதவியை அர்ப்பணிப்பதற்குத் தயாராக இருப்பதாக சுற்றுலாத்துறை பிரதியமைச்சர் அர்ஜூன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கட்சி பேதமின்றி அனைத்துத் தரப்பினரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டிய காலம் உருவாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனுராதபுரம், ஹக்கியாவ கங்காராம விகாரையில் கடந்த புதன் கிழமை இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதியமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் அரசியல் அதிகாரம் உரிய முறையில் பயன்படுத்தபடுமானால் பாதாளத்தில் விழுந்துள்ள நாட்டை மீட்டெடுக்க முடியும். என்றும் பரதியமைச்சர் தெரிவித்துள்ளார். கட்சிகளையும் வர்ணங்களையும் மறந்துவிட்டு அனைவரும் ஒன்றிணைய வேண்டிய காலம் வந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

# ஜனாதிபதி தேர்தல் திகதி 22ற்குப் பின்னர் அறிவிப்பு?

(கொழும்பு)

அரசியலமைப்பிற்கு அமைய அடுத்த ஜனாதிபதி தேர்தல் எப்போது நடைபெறும் என்பது பற்றி இம்மாதம் 22ஆம் திகதிககு பின்னர் தேர்தல் ஆணையாளர் திணைக்களம் அறிவிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எந்தவொரு காரணத்தினாலும் குறித்த அறிவிப்பு தாமதிக்கப்பட மாட்டாது என தேர்தல் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அடுத்த ஜனாதிபதித்தேர்தல் எப்போது நடத்தப்படும் என அரசுத் தலைவா உயர் நீதிமன்றத்தின் கருத்தை அறிய முற்பட்டுள்ளமை தொடர்பாக கருத்துத்தெரிவித்திருக்கும் தேர்தல் ஆணையாளர் நடைபெறும் விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தி வருவதாகவும் அதற்கேற்றவாறு தனது செயற்பாடுகள் அமையும் என்றும் தொ! வித்துள்ளார். (ற)

# யானை இடைமறித்ததால் பள்ளத்தில் வீழ்ந்தது பஸ்

(கொழும்பு)

கொழும்பில் இருந்து அக்கரைப்பற்றை நேக்கிச் சென்ற தனியார் பஸ் ஒன்று எகல்லோயாக் காட்டுப்பகுதியில் விபத்துக்குள்ளானதில் பஸ்ஸில் பயணம் செய்த 12 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் அதிகாலை 3.15 மணியளவில இடம்பெற்றுள்ளது.காயமடைந்த பயணிகள் அம்பாறை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

. கொழும்பில் இருந்து அக்கரைப்பற்று நோக்கிக் குறித்த பஸ் சென்றுகொண்டிருந்த போது எகல்லோயாக் காட்டுப்பகுதியில் யானை இடைமறிததையடுத்து சாரதி பஸ்ஸை பின்நோக்கிச் செலுத்தியுள்ளார். அப்போது பஸ் பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# இலங்கையில் குடும்ப முறையைச் சீரழிக்க

## —மேற்கத்திய நாடுகள் முயற்சி—

## விமல் வீரவன்ச குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கை வந்துள்ள அமெரிக்க இராணுவத்தினர் இலங்கை இராணுவத்தின் உள் இரகசியங்களை பெற்றுக்கொண்டதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் இணைத்தலைவர் விமல் வீரவன்ச குற்றம் சுமத்தியுள்ளார்.

அண்மையில் இலங்கை வந்துள்ள அமெரிக்கப் படையினர் இலங்கைப் படையினரோடு இணைந்து தமிழீழ விடுதலை புலிகள் தொடர்பான தகவல்களை பகிர்ந்துகொண்டதாகவும் பின்னர் அவர்கள் அத்தகவல்களைத் தமமுடன் எடுத்துச்சென்றுள்ளதாகவும் வீமல் வீரவன்ச தெரி வித்துள்ளார்.

இலங்கை நாட்டின் ரகசியங்களை இன்னொரு நாடு பெற்றுக் கொள்வது மிகவும் ஆபத்தான விடயம் என அவர் தெரிவித்துள்ளார்.

மேற்கததிய நாடுகள் இன்று இலங்கையில் தனிநாடு ஒன்றை உருவாக்கி அதன் மூலம் இலங்கையின் வளங்களை சுரண்டுவதற்கு திட்டமிடுகின்றன.

இலங்கையல் விவாகரத்து முறையை இலகுவாக்கும் பிரேரணையை அரச சார்பற்ற அமைப்புக்களின் உதவியோடு மேறகத்திய நாடுகள் கொண்டுவர முனைகின்றன. அதன் மூலம் இலங்கையின் குடும்ப முறையை சீரழிக்க அவை முயற்சிக்கின்றன என்றும் விமல் வீரவன்ச குற்றம் சுமத்தியுள்ளார். (அ-9)

# சேது சமுத்திரத் திட்டம் அரசியல் கட்சிகள் மௌனம்

## ஜாதிக ஹெல உறுமய குற்றச்சாட்டு

(கொழும்பு)

சேது சமுத்திரத் திட்டத்தினால் ஏற்படும் விளைவுகள் குறித்து இந்த நாட்டிலுளள எந்த அரசியல் கட்சியும் வெளிப்படையாகப் பேசுவதிலலை என்று ஜாதிகஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இந்தியாவுடனான ராஜதந்திர உறவு முறிவடையும் என்ற பயமே இதற்கு காரணம் என்று ஜாதிகஹெல உறுமயக்கட்சியின் இணைப்பாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

பொருளாதார தேவைகளுக்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு இந்தியா முறபடுகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நிலைமை இப்படி இருக்க அரசியல் கட்சிகள் இந்தியாவுடனான நல்லுறவை பாதுகாத்துக் கொள்வதற்காக சேதுசமுத்திரத் திட்டம் தொடர்பாக எதுவும் கூறுவதில்லை என்று இணைப்பாளர் மேலும குற்றம் சாட்டியுள்ளார். (அ-9)

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும் - குறள்

வலம்புரி

## படையினர் நகர்வதே பிரச்சினைக்கான தீர்வாகும்

இணுவில் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற சம்பவங்கள் மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன.

இராணுவத்தரப்பின் பொறுப்பற்ற செயலால் அப்பாவி இளைஞன் ஒருவர் பலியாகிய சம்பவம், அதனைத் தொடர்ந்து யாழ்.பொலிஸ் அத்தியட்சகர் தாக்கப்பட்டு உயிரிழந்தமை போன்ற நிகழ்வுகள் துன்பகரமானவை.

சிகை அலங்கரிப்பு நிலையத்தில் தனது கடமையை ஆற்றிக்கொண்டிருந்த இளைஞன் மீது இராணுவச்சிப்பாய் சுட்டதன் பின்னணி என்ன? என்பது ஆராயப் படவேண்டியதொன்றாகும்.

இராணுவச் சிப்பாயின் துப்பாக்கிச் சூட்டுக்கு இளைஞன் பலியானதும் அது ஒரு தவறுதலான சம்பவம் என இராணுவத்தரப்பு அறிக்கை விடுவது எவ்வகையிலும் நியாயமாகாது.

அதேவேளை இது போன்ற அறிக்கைகளை இராணுவத்தரப்பு விடுவதனூடாக தமிழ் மக்களின் உயிர்கள் பெறுமதியற்றவையாக பிரகடனப்படுத்தப்படுகின்றன.

இந்தத் தவறை படைத்தரப்பும், நீதி பரிபாலனமும் தொடர்ந்து இழைத்து வருகின்றது. குற்றவாளிகள் என தீர்ப்பு வழங்கப்பட்ட படையினருக்கு மேன்முறையீடுகள், விடுதலை வழங்குவதும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட பதவிகள், மன்னிப்பு வழங்குவ்வதன் காரணமாகவும் தமிழ் இன விரோதச் செயல்கள் தொடர்ந்த வண்ணமுள்ளன.

இணுவிலில் நேற்று முன்தினம் நடந்த சம்பவம் குறித்து பூரணமான விளக்கம்– விசாரணைகள் நடத்தப்பட்டு உரிய சிப்பாய் இனங்காணப்பட்டிருப்பாராயின், இராணுவ உயர்அதிகாரிகள் மீதான நம்பிக்கைகள் வலுப்பட்டிருக்கும்.

ஆனால் அத்தகைய நிகழ்வுகள் எதுவுமே இதுவரை காலமும் இடம்பெற்றதாக இல்லை.

இதேநேரம், யாழ்.பொலிஸ் அத்தியட்சகர் கடத்தப்பட்டு பின்னர் அவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவமும் துன்பகரமானதே.

இத்தகைய இரண்டு சம்பவங்களும் மனித மனங்களை வக்கிரமடையச் செய்துவிடக்கூடியவை. குறிப்பாக, சிறுவர்கள் மத்தியில் இத்தகைய கொலைச் செய்திகள் எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்திவிடும்.

சிங்கள இராணுவத்தின் கைகளில் உள்ள துப்பாக்கிகள் தவறுதலாக வெடித்தாலும்,அதற்கு அப்பாவித்தமிழ் மக்களே பலியாவர் என்றால், இதை விட மிகமோசமான ஜனநாயகப் படுகொலை வேறெங்குமே இருக்கமுடியாது.

தமிழ் மக்களின் வாழ்விடங்களில் இராணுவத்தினர் ஆயுதங்களுடன் நடமாடுவது,சந்திக்குச் சந்தி காவலரண்களை அமைத்திருப்பது போன்றவை தமிழ் பிரதேசங்களில் யுத்த சூழ்நிலையைத் தொடர்ந்தும் நினைவு படுத்திக்கொண்டே இருக்கின்றது.

இராணுவத்தின் பொறுப்பற்ற செயல் கண்டு பொதுமக்கள் கொதித்தெழுவதை தடுக்கவேண்டுமாயின் அதற்கான ஒரே வழி தமிழ்மக்களின் வாழ்விடங்களில் இருந்து படைத்தரப்பை வெளியேற்றுவதே ஆகும்.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற பேரில் தமிழ்மக்களின் குடியிருப்புக்களை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் படையினர் உயர் பாதுகாப்பு வலயத்தைக் கடந்து மக்களின் வாழ்விடங்களுக்குள் நடமாடுவது எதற்காக?

இலங்கைத் தீவு பௌத்த சிங்கள நாடு என்ற நினைப்பிலா? இந்த கேள்விகள் தமிழ் மக்களிடையே எழுந்துள்ளது. இதனைப்புரிந்து கொள்ள ஆட்சியாளர்களும் படையினரும் தவறுவார்களாயின் பொது மக்களுக்கும் படைத்தரப்புக்குமிடையிலான முறுகல் நிலை வலுவடைவதும், அதனால் உயிர்ச் சேதம் ஏற்படுவதும் தவிர்க்கமுடியாத காரியமாகிவிடும்.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

# அரசின் புதிய நடைமுறைகள்...

நோர்வே பிரதித்தூதுவருடனான சந்திப்பின் பின்னர் கருத்துதெரிவித்த அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் இதனைத்தெரிவித்தார்.

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பை தொடர்ந்து செய்தியாளர்களுக்கு வழங்கிய செவ்வியிலே அவர் இதனைத்தெரிவித்தார்.

கேள்வி:- இன்றைய சந்திப்பு தொடர்பாக?

பதில்:- தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலைமைகளில் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது தற்போதைய நெருக்கடி நிலைமையின் தீவிரத்தன்மை பற்றி நாம் எடுத்து விளக்கியுள்ளோம். யுத்தநிறுத்த உடன்பாடு பாரிய நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டு இருப்பது தொடர்பாகவும் எமது மக்கள் சமாதான முயற்சிகளில் முழு அளவில் நம்பிக்கையிழந்து நிற்கின்ற சூழலில் அதன் வெளிப்பாடுகள் பற்றியும் தெளிவாக விளக்கியுள்ளோம்.

### யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலை

கேள்வி:- யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலைமைகள் பற்றிப் பேசப்பட்டதா? முடிவுகள் ஏதும் எடுக்கப்பட்டதா?

பதில்:- யாழ்ப்பாணம் மட்டுமல்ல பொதுவாகவே தமிழர் தாயகத்தின் அனைத்து பகுதிகளிலும் இடம்பெற்று இருக்கின்ற நெருக்கடிகள் பற்றி கலந்துரையாடியுள்ளோம். குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நெருக்கடி நிலைமைபற்றி விரிவாக ஆராய்ந்தோம். அத்துடன் யாழ்ப்பாண நிலைமைகளை தொடர்பாக தெளிவாக விளக்கியுள்ளோம். இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசங்கள் என்று சொல்லப்படுகின்ற பகுதிகளில் இராணுவ நெருக்குவாரங்கள், அச்சுறுத்தல், கொலை முயற்சிகள் தொடர்ந்து இடம்பெறுவதால் மக்கள் மத்தியில் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது. அதனுடைய வெளிப்பாடாகத்தான் நேற்று நடந்த சம்பவங்களையும் பார்க்கிறோம். யாழ்ப்பாணத்தில் உள்ள நிலைமைகளை முழு அளவில் அறிய முடியாமல் உள்ளது. ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு போக்குவரத்துக்கள் முழு அளவில் முடக்கப்பட்டுள்ள நிலையில் நாம் எமது போராளிகளுடன் தொடர்பு கொண்டு தகவல்களை பெற்றுக்கொள்ள முடியாதவாறு பாரிய நெருக்கடி யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ளது.

நிலைமைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நாம் முயற்சிகள் மேற்கொண்ட வண்ணம் உள்ளோம். இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதி என்பதால் இராணுவமும் அதன் சட்டஒழுங்குகளை பேணுகின்ற அமைப்புக்கள் மூலமும்தான் நிலைமைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம் என நினைக்கிறேன். இராணுவமே பிரச்சினையுடன் சம்பந்தப்பட்டு இருப்பதால் எந்தளவு தூரம் நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம் என்பதை எம்மால் கூற முடியாதுள்ளது. நிலைமைகளை ஆராய்ந்துள்ளோம். கண்காணிப்புக் குழுவுடனும் ஏனைய சம்பந்தப்பட்டவர்களுடனும் தொடர்புகளைப் பேணி வருகிறோம்.

கேள்வி:- போர்நிறுத்த செயற்பாடுகள் நாளுக்கு நாள் மோசமடைந்து வருகின்றன. இந்த நிலைமையில் நோர்வேயின் உயர்மட்டக் குழுவின் தங்களைச் சந்தித்துள்ளனர். அரசிடமிருந்து ஏதாவது தகவல்கள் கிடைத்திருக்க வேண்டும். இதன் முக்கியத்துவம் பற்றி?

பதில்:- நோர்வே உயர்மட்டக்குழுதான் இங்கு வந்தது. சமாதான முன்னெடுப்புக்கள் முக்கியத்துவம் வகிப்பவர்கள் அவர்களே. அவர்களுக்கு இன்றைய நிலைமைகளை விளக்கியுள்ளோம். விவாதிக்கப்பட்ட கருத்துக்கள் பரிமாறப்பட்டு நடைமுறை சாத்தியமான முறையில்தான் போர்நிறுத்த உடன்பாடு ஏற்பட்டது.

இரு தரப்பும் ஏற்றுக்கொண்ட உடன்படிக்கை என்ற வகையில் உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களை உடனடியாக கொண்டு வருவதுதான் தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலைமையை தணிக்க உதவும்.

யுத்த நிறுத்த உடன்படிக்கையில் உள்ள விடயங்கள் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். இதில் மிகமுக்கியமானது இயல்பு நிலைமையை ஏற்படுத்துவது. அதாவது இராணுவ நெருக்குவாரங்களை நீக்கி மக்கள் தங்கள் சொந்த இருப்பிடங்களுக்குச் செல்லவும் மக்கள் சுதந்திரமாக நடமாடவும் தமது வாழ்வை பேணிக்கொள்வதற்கும் இயல்பு நிலைமையைக் கொண்டு வருவதுடன், யுத்தநிறுத்த உடன்படிக்கையில் உள்ளது போல ஆயுதக்குழுக்களின் நடவடிக்கைகள் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகள்தான் யுத்த நிறுத்த உடன்படிக்கையை கேள்விக்குறியாக்கி உள்ளன. உடனடியாகவே ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும். ஆயுதங்கள் களையப்பட்டு நிலைமைகள் சீர்செய்யப்படவேண்டும் என்பதை தெளிவுபடுத்தியுள்ளோம். முக்கியமாக இருதரப்பும் இணைந்து உருவாக்கிய பொதுக்கட்டமைப்பு தற்போது செயலிழந்து உள்ளது.

இந்நிலையில் எமது தாயகப் பிரதேசத்தில் மனிதாபிமானப் பணிகளுக்கு சர்வதேச சமூகம், இலங்கை அரச பார்த்துக் கொண்டிருக்கமுடியாது. உடனடியாக விடுதலைப் புலிகளோடு ஒரு ஏற்பாட்டை செய்து எமது மக்களுக்கான உதவிகளை உடனடியாக கொண்டுவர வேண்டும். இந்த நல்லெண்ண செயற்பாடுகள் நெருக்கடியை ஓரளவுக்கு தணிப்பதற்கு உதவும் என்ற சூழலை இன்றைய சந்திப்பில் விளக்கியுள்ளோம்.

### போராளிகள் பயண ஒழுங்கு

கேள்வி:- போராளிகளின் பயண ஒழுங்கில் அரசாங்கம் யோசனைகளை அனுப்பியுள்ளதாகவும் அதற்கு தாங்கள் அதற்கு பதில் அனுப்பியதாகவும் கூறப்படுகிறது அதில் என்ன அடங்கியிருக்கின்றது?

பதில்:- எங்கள் போராளிகளை பாதுகாப்பான போக்குவரத்துப் பற்றிய நடைமுறைகள் பற்றி தெளிவாக கண்காணிப்புக்குழு ஊடாக அனுப்பியிருந்தோம். ஆனால், அவற்றை முழுமையாக ஏற்றுக்கொண்டு அரசு பதில் தரவில்லை. அரசு ஆளணி எண்ணிக்கையை குறைத்து பணிமாற்ற கட்டுப்பாடுகளை கொண்டு வந்ததன் காரணத்தால் எமது தலைமைப் பீடத்தால் அரசின் பதில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இச்செயலையும் கண்காணிப்புகுழு ஊடாக அனுப்பியுள்ளோம். நேற்று முன்தினம் அரசால் புதிய நடைமுறைகள் அனுப்பப்பட்டுள்ளன. அது எமது தலை மைப்பீடத்தின் பரிசீலனையில் உள்ளது. அதில் அம்பாறை மாவட்ட பயண ஒழுங்கு பற்றிகுறிப்பிடாததனால் தற்போது அது பற்றிய விளக்கத்தைக் கேட்டு இருக்கிறோம். அது பற்றிய பதில் வந்தால் மேலதிகமாக கூறமுடியும்.

கேள்வி- போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு மூன்று ஆண்டுகள் கடந்து விட்டன. இரு தரப்பும் மாறிமாறி குற்றச்சாட்டுக்களை சுமத்திய நிலையில் ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ள திட்டம் இருக்கிறதா? போர் நிறுத்த உடன்பாட்டில் திருத்தம் செய்யும் யோசனை இருக்கிறதா?

பதில்:- இரு தரப்புக்கும் பொறுப்புக்கள் இருக்கின்றன. ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகள் இடம்பெறவில்லை என்பது இன்று சர்வதேச சமூகம் அறிந்த உண்மை. உண்மைகளை எமது மக்களும் புரிந்துள்ளார்கள். எந்தத் தரப்பு நடைமுறைகளை பேணவில்லை என்பது யாவரும் அறிந்த உண்மை. யுத்த நிறுத்தம் தொடர்பில் உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என நாம் வலியுறுத்தியுள்ளோம். விடுதலைப்புலிகள் நடைமுறைகளை புறந்தள்ளியிருந்தால் அதைச்சுட்டிக்காட்டலாம். அதற்கு எமது தலைமைப்பீடம் உடனடி நடவடிக்கை எடுக்கும். தமிழீழ விடுதலைப் புலிகளினால் நடைமுறைகள் ஒழுங்காக பேணப்பட்டு வருகின்றன. யுத்தநிறுத்த உடன்பாட்டை முழுமையாக நடைமுறைக்கு கொண்டுவர வேண்டும்.

கேள்வி:- பொதுக்கட்டமைப்பு தொடர்பாக நீதிமன்றத் தீர்ப்பு இருந்த போதும் அதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக செய்திகள் வெளிவந்த சூழலில் தங்களின் நிலைப்பாடு கோரிக்கைகள் எதனையும் அரசிற்கு முன்வைத்துள்ளீர்களா?

பதில்:- புதிய கோரிக்கையை நாம் முன்னெடுக்க வேண்டிய தேவை எமக்கில்லை. பொதுக்கட்டமைப்பு நீண்டகாலமாக விவாதிக்கப்பட்டு முடிவு எடுக்கப்பட்டது. பொதுக்கட்டமைப்பில் உள்ள விடயங்களை நடைமுறைக்கு கொண்டு வந்தால் போதுமானது. நிபந்தனைகளையோ, கோரிக்கைகளையோ முன்வைக்க வேண்டிய தேவை எமக்கில்லை.

கேள்வி:- வவுனியாவில் மக்கள் எடுத்த தீர்மானம் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் தங்களின் கருத்து?

புதில்- இவ்விடயமும் இச்சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தமிழீழத்தின் அனைத்து மக்களுமே எமது தலைமைப்பீடத்திற்கு தமது கருத்துக்களை தெரிவித்து வருகின்றார்கள். தமக்கு தீர்வு வேண்டும் என்பதே மக்கள் கோரிக்கையாக் உள்ளதுடன் அபிலாசையாகவும் உள்ளது. மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டிய நிலையில் எமது தலைமைப்பீடம் உள்ளது. சர்வதேச சமூகத்திற்கும் எமது மக்கள் தமது செய்திகளை வெளிப்படுத்தி வருகிறார்கள். அதேபோன்று எமது தலைமைப் பீடத்திற்கும் தமது உணர்வுகளை வெளிப்படுத்தி வருகிறார்கள். இந்நிலைமைகளை இன்றைய சந்திப்பில் தெளிவுபடுத்தியுள்ளோம்.

கேள்வி:- அரசு அமைதி முயற்சிகளில் இருந்து விலகி சனாதிபதி தேர்தலை இலக்காக கொண்டு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறதே?

பதில்:- இதுவொரு புதிய விடயம் அல்ல. இலங்கைத்தீவின் அரசியல் வரலாற்றிலே தொடர்ந்து நடைபெறுகின்ற நிகழ்வுதான். தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு தொடர்ச்சியாக துன்பப்பட்டு வருகிறார்கள். பேச்சுவார்த்தைகள் மூலம் அவ்வப்போது தீர்வு காணமுடியாத போது சிங்கள தேசம் உதாசீனம் செய்து தட்டிக்கழித்து தங்கள் அரசியல் அதிகாரப் (8ஆம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



நாம் பந்தப்பட்டவர்கள் என்ற எண்ணம் வெறும் மாயை. நாம் இன்பம் அனுபவிக்கிறோம். நாம் துன்பம் அனுபவிக்கிறோம் என்ற எண்ணங்களும் மிகப்பெரிய கற்பனையே. நமது எல்லை அற்ற அறிவையும் ஆற்றலையும் உணர்ந்து எழுந்து நிற்கும் நாள் வந்தே தீரும். அந்த மாபெரும் நிகழ்ச்சியை விரைவு படுத்த நாம் அனைவரும் உதவிசெய்வோம்.

**சுவாமி விவேகானந்தர்**

## ஆசிரியர் நியமனம் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றமுடியும்

பட்டதாரி ஆசிரியர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகப் பரீட்சை யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெற்றுவருகின்றது.

நேற்றைய தினம் நடைபெறவிருந்த நேர்முகப் பரீட்சைக்கு ஊரடங்குச் சட்டம் காரணமாக தோற்றமுடியாதவர்கள், எதிர்வரும் 10 ஆம் திகதிக்குள் வரும் ஓர் தினத்தில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றமுடியுமென கல்விப் பணிப்பாளர் செல்வரத்தினம் அறிவித் துள்ளார். (ந)

## குறுந்திரைப்படம்

யாழ். பல்கலைக்கழக திரைப்படவட்டமும், லண்டன் ‘விம்பம்’ அமைப்பும் இணைந்து நடாத்தும் ‘குறும்பட விழா’ கைலாசபதி கலையரங்கில் நாளை மாலை 4.30 மணிக்கு நடைபெறும்.

ஈழத்தவர்களாலும், புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களாலும் தயாரிக்கப்பட்ட 14 குறும் படங்கள் இவ்விழாவில் இலவசமாகக் காண்பிக்கப்படும்.

2004 ஆம் ஆண்டில் ‘விம்பம்’ அமைப்பு நடாத்திய குறும்படப்போட்டியில் தெரிவுசெய்யப்பட்ட ஈழத்து குறும்படக் கலைஞருக்கான பரிசில்களும் இவ்விழாவில் வழங்கப்படவுள்ளது. (ச)

# சின்னமடு மாதா பெருநாள் யாழ். பக்தர்கள் செல்லவில்லை

(யாழ்ப்பாணம்)

சின்னமடுமாதா கோயிலின் வருடாந்த திருச்சொரூப பவனி பெருநாள் நேற்று நடைபெற்றது. யாழ்ப்பாணத்திலிருந்து பெருந்திரளான பக்தர்கள் ஆலயத்திற்குச் செல்வது வழக்கமாக இருந்தபோதிலும், நேற்றைய ஊரடங்கு உத்தரவு காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து பக்தர்கள் எவரும் அங்கு செல்லவில்லை.

இதேவேளை தீவகத்தில் இரவு தரிப்பில் இருந்த கோண்டாவில் சாலை பஸ்களும், மினிபஸ்களும் தீவகத்திற்குள் பக்தர்களை ஏற்றியிறக்கும் சேவையை வழங்கின.

ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனன் உற்சவகால ஏற்பாடுகளை அங்கு தங்கியிருந்து மேற்கொண்டார்.

ஏற்கனவே ஆலயத்திற்குச் சென்ற சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவு, மக்கள் நலன்புரிக் கழகம், சாரணர் இயக்கம் என்பன சிறப்பான சேவையாற்றியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந)

# மொழிவிருத்தி ஆய்வுகூடம் கிளிநொச்சியில் திறப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் மொழிவிருத்தி ஆய்வு கூடத்தின் புதிய கட்டடத் திறப்புவிழா நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முதன்மைச்சுடரினை தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார்.

புதிய கட்டடத்தின் பெயர்ப் பலகையினை அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த பத்மநாதன் திரைநீக்கம் செய்துவைக்க, கட்டடத்தினை தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். (ச)

## மண்டைதீவுக்குச் செல்ல அனுமதி மறுப்பு

(மண்டைதீவு)

யாழ்ப்பாணத்திலிருந்து மண்டைதீவுக்குச் சென்றவர்களை கடற்படையினர் நேற்று அங்கு செல்லவிடாது தடுத்தனர்.

கடற்படையின் அடையாள அட்டை வைத்திருப்பவர்களைத் தவிர வேறு எவரும் அங்கு செல்ல அனுமதிக்கப்படவில்லை.

ஊரங்குச்சட்டம் தீவகத்தில் அமுல்படுத்தப்படாத போதிலும், கடற்படையின் இந்த நடவடிக்கையால் மண்டைதீவுக்குச் சென்ற பலர் அங்கு செல்லமுடியாது திரும்பினர். (ந)

## பிற்போடப்பட்டுள்ளது

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயமும், சுகவாழ்வு நிறுவனமும் இணைந்து சங்கானை, கரவெட்டி கல்விக் கோட்டங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு ‘வன்முறையற்ற தொடர்பாடல், மத்தியஸ்தம் என்பனவற்றின் ஊடாக சமாதானத்தைக் கட்டியெழுப்பல்’ என்ற தலைப்பில் கடந்த 4 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட பயிற்சிப்பட்டறை தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படுமெனவும் இத் திட்டத்திற்கான யு.என்.எச்.சி.ஆர். இணைப்பாளர் தெரிவித்தார். (ச)

# பட்டிருப்பு அரசியல்துறை அலுவலகம் மீது நேற்று அதிகாலை கைக்குண்டுத் தாக்குதல்

தமிழீழ விடுதலைப் புலிகளின் பட்டிருப்புக் கோட்ட அரசியல்துறை அலுவலகம் மீது நேற்று அதிகாலை கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நேற்று அதிகாலை 5.50 அளவில் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட வேளையில் பட்டிருப்புக்கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் உட்பட மேலும் சில போராளிகள் அங்கு இருந்துள்ளனர். எனினும் போராளிகளுக்கு எந்தவிதமான பாதிப்புக்களும் ஏற்படவில்லை. பட்டிருப்பு கோட்ட அலுவலகம் பலத்த சேதமடைந்துள்ளது.

இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் இந்தத் தாக்குதலை நடத்திவிட்டுச் சென்றுள்ளனர்.

அருகிலிருந்த அதிரடிப்படை முகாமிலிருந்து வந்தவர்களினால் 5 கைக்குண்டுகள் வீசப்பட்டுள்ளது. அலுவலகத்திற்குப் பின்புறமாக குண்டுகள் விழுந்து வெடித்ததினால் போராளிகளுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லையென மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் தெரிவித்தார். (ச-8)

# அரசின் புதிய நடைமுறைகள்...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போட்டிகளிலேயே கூடிய கவனம் செலுத்தி வந்துள்ளது. அதுதான் இன்றும் நடந்து கொண்டு இருக்கிறது.

மூன்றரை வருடகால சமாதான முயற்சியாலும் பல கட்டங்களிலும் இதுதான் நடந்தது. ஒரு ஆட்சிபீடத்தில் உள்ள அரசு ஏதோ பிரச்சினைக்கு தீர்வு காண்பதுபோல் ஒரு தோற்றப்பாட்டை உருவாக்கும். அதை எதிர்த்துக்கொண்டு எதிர்க்கட்சியும் ஏனைய கட்சிகளும் இணைந்து ஆட்சியை கவிழ்த்து நிலைமைகளை மோசமாக்குவதும், ஆட்சிபீடத்திற்கு வந்தவுடன் பிரச்சினைகள் தீர்வு இல்லாமல் இழுத்தடிப்புக்களை மேற்கொள்வதும் தான் வழமை.

சிங்கள தேசம் தமிழ்மக்களுக்கு தீர்வைத் தராது என்பதில் உறுதியாகவுள்ளனர். சர்வதேச பிரசன்னத்தில்கூட சிங்களதேசம் எமக்கு தீர்வைத்தரும் வகையிலான எந்தவித அர்ப்பணிப்புக்களிலும் ஈடுபடவில்லை.

### காலக்கெடுவின் நிலைப்பாடு

கேள்வி:- தங்களின் 14 நாட்கள் காலக்கெடுவின் நிலைப்பாடு என்ன?

பதில்:- தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் இரண்டு வாரகாலம் கொடுத்தார்கள். போராளிகளின் பயணம் இயல்பாகவே இடம்பெற்றுக்கொண்டு இருக்கிறது. படைத்தரப்பினர் அதைதடுக்க முற்பட்டால் நிலைமைகள் நெருக்கடியாகும். தடுப்பு முயற்சிகளில் ஈடுபடாமல் விட்டால் நிலைமைகள் மோசமாகாது. கண்காணிப்புக்குழு ஊடாக தகவல்கள் எமக்கு கிடைத்தவண்ணமுள்ளதால் நிலைமை சீராகும் என்றால் சரி. தற்போது நிலைமைகள் மோசமாகவுள்ளன. நல்ல தீர்மானங்கள் எடுக்கப்பட்டால் நிலைமைகள் நல்லதாக அமையும்.

கேள்வி:- இராணுவ சோதனைச் சாவடிகள் ஊடாக இல்லாமல் தங்கள் போக்குவரத்து இடம்பெறுகின்றது என்று கூறுகிறீர்களா?

பதில்:- இருக்கலாம் என்றுதான் நான் நம்புகிறேன்.

கேள்வி:- 14 நாட்கள் தொடர்பாக மக்கள் மத்தியில் வேறு உணர்வுகள் எழுந்தன. ஆனால், செய்திகள் பெரிதாக வரவில்லை?

பதில்:- 14 நாள் காலக்கெடுவில் போராளிகளுடைய ஒழுங்கான பாதுகாப்பைத் தந்து நிலைமையை சீர்செய்யாவிட்டால் விடுதலைப் புலிகள் தமது இயல்பான போக்குவரத்தினை செய்வார்கள் என்பதை கூறியிருந்தோம். அது நடந்து கொண்டு இருக்கின்றது. மக்கள் சந்தேகப் படுவார்கள் என்று நான் நினைக்கவில்லை. இராணுவமோ ஏனைய படைப்பிரிவுகளோ புலிகளின் பயணத்தை தடுத்தால் நிலைமைகள் மோசமடையும். தற்போது அந்நிலை உருவாகவில்லை. எந்தநேரத்திலும் நிலைமைகள் மாறலாம்.

### ஜனாதிபதித் தேர்தல்

கேள்வி:- மகிந்த ராஜபக்சவை ஜனாதிபதி வேட்பாளராக அரசு நியமித்துள்ளது. இது தொடர்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் உணர்வலைகள் என்ன?

பதில்:- தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் தெற்கிலேயே ஏற்படும் மாற்றங்கள் சமாதானத்தைக் கொண்டு வருவதாக தோற்றப்பாடுகளை உருவாக்கலாமே தவிர, தமிழ்பேசும் மக்களின் தீர்வு விடயத்தில் அர்ப்பணிப்புடன் செயற்பாடுகள் இடம்பெறும் என்று எதிர்பார்க்க முடியாது. இந்நிலையில் புதிதாக வரப்போகின்றவர்களினால் தமிழ் பேசும் மக்களுக்கு தீர்வை தருவார்கள் என்று நம்பவில்லை. மக்களே தற்போது தீர்மானம் எடுத்துவிட்டார்கள். தங்களுடைய தலைவிதியை தாமே தீர்மானிப்பதென்று அதன் அடிப்படையில் தமது செயற்பாடுகளை மக்கள் எடுத்து வருகிறார்கள்.

கேள்வி- ரணிலைப் பற்றி?

பதில்- தெற்கிலே உள்ள எந்த தலைவர்களையும் நம்பும் நிலையில் நாங்கள் இல்லை. எவர் தொடர்பாகவும் கருத்து கூறும் நிலையிலும் இல்லை. (ச)

# ஜனாதிபதித் தேர்தல் குறித்து உரியநேரத்தில் அறிவிக்கப்படும்

## தேர்தல் ஆணையாளர் கடிதம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் எப்போது நடைபெறுமென உரிய நேரத்தில் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க ஜாதிக ஹெல உறுமயவிற்குத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் எப்போது நடைபெறுமென அறிவிக்குமாறு கோரி ஜாதிக ஹெல உறுமயவினால் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவிற்கு அனுப்பப்பட்ட கடிதத்திற்கு பதிலளித்து அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் குறித்து வர்த்தமானிமூலம் உரிய நேரத்தில் அறிவிக்கப்படுமென்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

### பொலிஸ்...

குருநாகலில் நடைபெறவுள்ளது.

1948 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 5ஆம் திகதி பிறந்த இவர் 1972 ஆம் ஆண்டு இலங்கை பொலிஸ் சேவையில் உதவிப் பொலிஸ் அலுவலகராக இணைந்தார்.

9 பதவி உயர்வுகளைப் பெற்று 2000 ஆம் ஆண்டு பொலிஸ் அத்தியட்சகராக பதவி உயர்த்தப்பட்டார்.

பின்னர் கடந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் சேவைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ச-8)

### யாழில் நெருக்கடி...

ஆத்திரமடைகின்ற நிலைமை உருவாகின்றது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் படைத்தரப்பினரும், பொலிஸாரும் பொருத்தமான அணுகுமுறைகளை மேற்கொள்ளாமல் மக்களை நெருக்குவாரத்துக்குள் தள்ளுவதனால் மேலும் சூழ்நிலை சிக்கலடைகின்றது. இதுவே யதார்த்தமானது. இவ்வாறான சம்பவங்களை நாம் விரும்பவில்லை.

எனவே இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமல் படைத்தரப்பு உறுதிசெய்யவேண்டும். அதேநேரத்தில் மக்கள் நெருக்கமாக வாழும் இடங்களில் ஆயுதங்களுடனோ அல்லது ஆயுதங்களைச் சுடும் நிலையிலோ கொண்டுசெல்வது சட்டரீதியாகத் தடுக்கப்பட்டும்கூட அது இங்கு மீறப்பட்டிருக்கின்றது. எனவே இனிவரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறக்கூடாது.

ஒரு தவறு நடப்பதற்கு முன் நடைபெறாமல் தடுக்கப்படவேண்டும். அவ்வாறு தடுக்கப்படுமாயின் மேலும் பிரச்சினைகள் வளர்வதற்கு வாய்ப்பில்லை.

இச்சம்பவங்களில் புலிகளைத் தொடர்புபடுத்துவது தவறானது மட்டுமல்ல, உண்மைக்குப் புறம்பானதுமாகும். மேலும் ஊரடங்குச் சட்ட நடவடிக்கைகளும் மக்களை இன்னும் அச்சத்திற்குள்ளாக்கியுள்ளது என யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியினால் தெளிவுபடுத்தப் பட்டுள்ளது.

இச்சந்திப்பில் விடுதலைப் புலிகளின் தரப்பில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தலைமையிலான குழுவும், இராணுவத் தரப்பில் இராணுவத் தளபதி சுனில் தென்னக்கோன் உட்பட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, என்.ரவிராஜ் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ச)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
மக்கள்திலகம் எம்.ஜீ.ஆர், லதா, நாகேஷ் நடித்த
உரிமைக்குரல்
கா.நே.11.00,2.45,6.00 (பு.நே)

மனோகரா யாழ்.
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதின அதிரடிவெளியீடாக
மாதவன், சதா, கோவை சரளா நடித்த




கா.நே: 10.30, 02.30, 6.30, 9.30

நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்
அர்ஜுன், சினேகா, கிரண், வடிவேலு சேர்ந்து கலக்கும்
சில தினங்கள் மட்டும்.
கா.நே 10.30, 02.30 06.30 09.30




இந்தியாவிலும். இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.08.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.